# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:57 **தேதி**:-28.03.2018

**துணை டவர் நிறுவனத்திற்கு எதிராக அடுத்த கட்ட போராட்டங்கள்**

அன்பார்ந்த தோழர்களே,

புதுடெல்லியில் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட பின்னர் ALL UNIONS ANந ASSOCIATIONS OF BSNL தலைவர்கள் FNTO அலுவலகத்தில் NFTE பொது செயலாளர் தோழர் C.சந்தேஸ்வர் சிங் தலைமையில் கூடி விவாதித்தனர். இந்த கூட்டத்தில் BSNLEU, NFTE, SNEA, AIBSNLEA மற்றும் FNTO பிரதிநிதிகள் பங்கேற்று கீழ்கண்ட முடிவுகளை எடுத்துள்ளனர்.

1. காவல் துறையின் தடையையும் மீறி சஞ்சார் பவன் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று வெற்றி பெறச் செய்த அனைத்து தோழர்களுக்கும் இந்த கூட்டம் பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டது.
2. துணை டவர் நிறுவனத்தை திரும்ப பெறச்செய்வதற்கான போராட்டங்களை தீவிரப்படுத்துவது என இந்தக் கூட்டம் முடிவெடுத்துள்ளது. இதற்காக 12.04.2018 அன்று மாவட்ட, மாநில மற்றும் கார்ப்பரேட் அலுவலகங்களின் முன்பு பெருந்திரள் தர்ணா நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. துணை டவர் நிறுவனம் செயல்பட தொலை தொடர்பு துறை காட்டியுள்ளபடி BSNL இயக்குனர் குழு ஒப்புதல் கொடுக்கும் என்று சொன்னால் காலவரையற்ற வேலை நிறுத்தம் நடைபெறும் என்பதை நிர்வாகத்திற்கு AUAB சார்பாக தெரிவிப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது.
3. ஊதிய மாற்ற பிரச்சனையில் உள்ள முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. 24.02.2018 அன்று அமைச்சருடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் அடிப்படையில் நPEயின் ஒப்புதலுக்காக கோப்பினை நOT அனுப்பியுள்ளது. விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டுமென 28.03.2018 அன்று நPE செயலரை சந்தித்து வலியுறுத்துவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.
4. 19.04.2018 அன்று துணை டவர் நிறுவனத்தை திரும்ப பெற வேண்டும் என வலியுறுத்தி அனைத்து மாநில தலைநகர்களிலும் “ஆளுனர் மாளிகையை நோக்கி பேரணி” நடத்தி ஆளுனர்களுக்கு மனு அளிக்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. துணை டவர் நிறுவனத்திற்கு எதிரான மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்ய இந்த ‘ஆளுனர் மாளிகை நோக்கிய பேரணி’யை பயனபடுத்த வேண்டும் என்றும் முடிவு செய்துள்ளது.
5. துணை டவர் நிறுவனத்தை திரும்ப பெறவேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் புது டெல்லி மாவலங்கர் ஹாலில் 2018, மே மாதம் 9 அல்லது 10ஆம் தேதியில் ஒரு தேசிய கருத்தரங்கை நடத்துவது என்றும் அதில் முக்கியமான பாராளுமன்ற உறுப்பினர்களை உரையாற்ற அழைப்பது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

BSNL நிறுவனத்தை காப்பாற்றும் இந்த தேச பக்த போராட்டத்தில் நாம் சக்தியாக பங்கேற்க வேண்டும். இந்த இயக்கங்களில் முழுமையாக பங்கேற்று வெற்றி பெறச்செய்வோம்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**